பயனாளிகள் அடையாளம் காணப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக 19,605 பண்ணைக் குட்டைகளுக்கு நிருவாக அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், டெல்டா அல்லாத பிற மாவட்டங்களில் அனுமதிக்கப்பட்ட 50 ஆயிரம் பண்ணைக் குட்டைகளில் இதுவரை 46,010 பயனாளிகள் அடையாளம் காணப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக 23 ஆயிரத்து 663 பண்ணைக் குட்டைகளுக்கு நிருவாக அனுமதி அளித்துள்ள நிலையில், 14,462 பண்ணைக் குட்டைகள் பணி துவங்கப்பட்டு, அவற்றில் 8,764 பணிகள் நிறைவு பெற்றுள்ளன என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 247, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

247—

பாதாள சாக்கடைத் திட்டம்

***7700—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, புலியூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

முற்பகல் 10—50

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, புலியூர் பேரூராட்சியில் 2013–2014 ஆம் ஆண்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த ரூ.1 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டில்

2014 ஜூலை 24]

விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. அனைத்துப் பேரூராட்சிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உறுதிபூண்டுள்ளதால், நிதி ஆதாரங்களின் அடிப்படையில், எதிர்வரும் ஆண்டுகளில், முன்னுரிமை அடிப்படையில் சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகரக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஜப்பான் கூட்டுறவு முகமை, ஜெர்மானிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவியோடு பல்வேறு திட்டங்களின்கீழ் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.

திரு. செ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், தமிழ்நாட்டில் இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற எண்ணத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்ற நிலையில் நல்லாட்சி செய்யும் வாழும் வள்ளல், எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக மக்கள் நலத் திட்டங்களைத் தந்து, இந்தியத் திருநாட்டில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்கிக் காட்டியவர், எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் சாதுரியம் கொண்ட சாணக்கியர் எங்கள் அம்மா அவர்கள். நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் 39 தொகுதிகளில் போட்டியிட்டு, 37 தொகுதிகளில் 100 சதவிகிதம் வெற்றிபெற்று, இந்திய வரலாற்றில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்தியாவையும் ஆளும் தகுதியைப் பெற்றிருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டியவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். என் தாயின் திருப்பாதங்களைத் தலைகுனிந்து வணங்கி எனது வினாவைத் தொடருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புலியூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் எதிர்வரும்

ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், புலியூர் பேரூராட்சி 15—வது வார்டு, வெள்ளாளப்பட்டியில் காட்டுவாரி தரைப் பாலம் ஒன்று பழுதடைந்துள்ளது. எனவே, அங்கு புதியதாக, சிறிய மேம்பாலம் கட்டித் தர மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட, ஏழையெளிய மக்கள் அதிகம் வாழும் அப்பகுதியில் உள்ள அந்தத் தரைப் பாலத்தில் மழைக் காலங்களில் கழிவுநீர் கலந்து வருவதால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. செ. காமராஜ்: ஆகையால் அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை, வாழும் வள்ளல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் சமர்ப்பித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தளவில், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே 55 திட்டங்கள் தீட்டப்பட்டு, அதில் 35 திட்டங்கள் கைவிடப்பட்டு, 20 திட்டங்களை எடுத்து, அதிலே ஒரேயொரு திட்டம் மட்டும் அவசர கதியாக, முழுமையாக முடிக்கப்பெறாத நிலையில், தேர்தல் நேரத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. செயல்படுத்தாமல் விடுபட்ட 19 பாதாள சாக்கடைத் திட்டங்களும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த மூன்று ஆண்டுகால பொற்கால ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, மேலும் 50 பாதாள சாக்கடைத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அனைத்து திட்டங்களும் செயலாக்கத்தில் இருக்கின்றன என்பதை இப்பேரவையிலே பதிவு செய்யவிரும்புகிறேன்.

2014 ஜூலை 24]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருந்த பாலம் கட்டுவது குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 248, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

248—

கால்நடைக் கிளை நிலையம்

***33892—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, காரப்பிடாகை வடக்கு ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கீழ்வேளூர் தொகுதி, காரப்பிடாகை வடக்கு ஊராட்சி ஒன்றியத்திலே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். கால்நடைத் துறை விதிகளுக்குட்பட்டு அப்பகுதியில் 3,000—க்கும் குறைவாக கால்நடைகள் உள்ளதால், அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*